# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 135/2018 நாள்.23.10.2025

PW2- திரு. சந்திரசேகரன், த/பெ. திரு. நடராஜன்

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

என் சார்பாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். மேலபுனவாசல் குடியானதெருவில் இருக்கிறேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை கொண்டுவந்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை பெறப்படவில்லை என்றால் ஆமாம். அ.சா.1 கண்ணன் அழைத்து சாட்சியம் சொல்லவந்தேன் என்றால் ஆமாம். வழக்கறிஞரிடம் விபரம் சொல்ல கண்ணன் அழைத்து போனார் என்றால் ஆமாம் நான்தான் விபரம் சொன்னேன். கண்ணன் என்ன சாட்சி இந்த வழக்கில் சொல்லியுள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கண்ணன் என்ன பரிகாரம் கோரி வழக்கு போட்டுள்ளார் என்றால் மனைகட்டில் ஒரு பகுதியை அவருக்கு ஒதுக்குவது தொடர்பாக போட்டுள்ளார். துறைமாணிக்கத்திற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 5 மகன்கள், ஒரு பெண்பிள்ளை இருந்து இறந்துவிட்டார். இளந்திரையன், ரவிவர்மன், மணிமொழி, கிள்ளிவளவன், கண்ணன் ஆகியோர் துறைமாணிக்கத்தின் ஆண்பிள்ளைகள் என்றால் ஆமாம். கண்ணன் நெய்வேலியில் வேலை பார்க்கிறார் என்றால் ஆமாம். வெளிநாட்டில் இருந்தது யார் என்றால் மணிமொழி. கிள்ளிவளவன் என்ன வேலை பார்த்தார் என்றால் வேலையில் இல்லை. ரவிவர்மன் கால்நடை மருத்துவராக இருந்தார் என்றால் ஆமாம். பஞ்சாயத்து எப்போது நடந்தது என்றால் 1991 ஆண்டு டிசம்பர் மாதம் தேதி ஞாபகமில்லை. எந்த நேரத்தில் நடந்தது என்றால் மதியத்திற்கு மேல். யார் யார் பஞ்சாயத்தில் பேசினார்கள் என்றால் 5பேர் பங்காளி உட்கார்ந்து பேசினோம். அப்போது ரவிவர்மன் மாமனார் இருந்தார். நடந்ததாக சொல்லப்படும் பஞ்சாயத்து ரவிவர்மன் இறந்தபிறகு கருமாதி காரிதன்று நடந்தது என்றால் ஆமாம். கருமாதி எங்கு நடந்தது என்றால் ஞாபகமில்லை. காரிதன்று ரவிவர்மன் மனைவி கலந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம். பஞ்சாயத்து நடந்தது ரவிவர்மன் மனைவிக்கு தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு நேரம் பஞ்சாயத்து நடந்தது என்றால் இரவு 6, 7.30 வரை நடந்தது. பஞ்சாயத்தில் பேசியதை

கையால் எழுதபட்டது என்றால் ஆமாம். யார் எழுதியது என்றால் பத்திரம் எழுதுபவர் வந்து எழுதினார். பஞ்சாயத்து முடிந்தவுடன் எழுதுவதற்கு அவரை அழைத்து வந்து எழுதினார்கள். அவ்வாறு எழுதிமுடிக்கும்போது ரவிவர்மன் மனைவியும், மாமனாரும் ஊருக்கு கிளம்பி போய்விட்டார்கள். அதன்பிறகு இருந்தவர்களிடம் எழுதியதில் கையெழுத்து வாங்கினோம். அவ்வாறு எழுதியதில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் ஆமாம். வேறு எங்கும், எதிலும் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் ஆமாம். பஞ்சாயத்தில் ரவிவர்மனுக்கு இடம் ஒதுக்கப்படவில்லை என்றால் ஆமாம். வெளிநாட்டில் வேலை பார்த்த மணிமொழிக்கும், என்எல்சியில் வேலை பார்த்த கண்ணனுக்கும் சொத்தில் பங்கு ஒதுக்கினார் என்றால் ஆமாம். வேலையை தவிர ரவிவர்மனுக்கு வேறு சொத்து இல்லை என்றால் அவர் சொந்தமாக சம்பாதித்து சொத்து வாங்கினார். பூர்விக சொத்தில் ரவிவர்மனுக்கு பங்கு கொடுக்கவில்லை என்றால் ஆமாம். ரவிவர்மனுக்கு ஏன் சொத்து கொடுக்கவில்லை என்றால் ரவிவர்மனின் அப்பா ஏற்கனவே கால்நடை மருத்துவர் படிப்பு சொத்தை விற்று படிக்கவைத்ததால் ஒதுக்கவில்லை. பஞ்சாயத்தில் எழுதிய ஆவணத்தில் மேற்படி விஷயம் எழுதபட்டுள்ளதா என்றால் இல்லை. பஞ்சாயத்தில் ரவிவர்மன் மனைவி கையெழுத்து போட்டாரா என்றால் அப்போது போடாமல் ஊருக்கு போய்விட்டார் பஞ்சாயத்து முடிந்தபிறகு சுப்ரமணியபிள்ளை ஊருக்கு போய் வாங்கி வந்தார். அவருடன் நான் போனேனா என்றால் இல்லை. ரவிவர்மன் மனைவி கையெழுத்து போட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். இந்த வழக்கில் அ.சா.1 விசாரித்தபோது ரவிவர்மன் மனைவிக்கு பங்கு கொடுக்க ஒப்பு கொண்டுள்ளார் என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக வேறு எந்த நீதிமன்றத்திலாவது வழக்கு நடந்தது என்றால் தெரியாது. இதை தவிர வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

<u>4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

துறை மாணிக்கத்திற்கு 5மகன்கள் என்றும் அதில் 2பேர்களான கிள்ளிவளவன், இளந்திரையன் வேலைக்கு போகவில்லை என்றால் ஆமாம். துறைமாணிக்கம் அரசு உதவிபெறும் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றினார் என்றால் ஆமாம். பணி தவிர அவர் பணம் கொடுத்து வாங்கிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு நிரந்தர

வசிப்பிடம் புனவாசல் என்றால் ஆமாம். துறைமாணிக்கம் வேலை கிடைத்தவுடன் கும்பகோணத்தில் போய் குடியேறினார். அவர் தனிபட்ட வருமானத்தை வைத்துதான் கும்பகோணத்தில் வீடு கட்டினார் என்றால் ஆமாம். அவரை கும்பகோணம் போனபிறகு விசேசத்தில்தான் பார்ப்பேன் என்றால் ஆமாம். மணிமொழி, கண்ணன், கிள்ளிவளவன் ஆகியோருக்குள் சுமூகஉறவு இல்லை என்றால் ஆமாம். துறைமாணிக்கத்திற்கு பாத்தியபட்ட சொத்து சம்மந்தமாக உயில் எழுதியது தெரியுமா என்றால் தெரியாது. கும்பகோணத்தில் உள்ள வீட்டில்தான் கிள்ளிவளவன் இருந்தார் என்றால் ஆமாம் இளந்திரையனும் இருந்தார். அவர் அப்பா இறந்தபிறகு இளந்திரையன் தஞ்சாவூர் வந்துவிட்டார். பஞ்சாயத்து நடந்ததாக சொல்லும் ஆவணத்தில் கண்ட தேதியில்தான் சொத்தை பிரித்து கொண்டார்கள் என்று சொல்லுகிறேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் பஞ்சாயத்தில் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 வழக்கிற்காக தயார் செய்யபட்டது என்றால் சரியல்ல.

மற்ற விஷயங்களை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் மேற்கொண்ட குறுக்குவிசாரணை ஏற்றுகொள்ளபட்டது.

6,7 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்குவிசாரணை ஏற்றுகொள்ளபட்டது.

8ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று முன்னிலைபடுத்தப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.